நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## DVC. No. 2/2017

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மதுவந்தி |
| தந்தை / கணவர் பெயர் | : | ரங்கசாமி |
| கிராமம் | : | மேட்டூர், இந்திராகாந்தி காலனி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 30 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், செப்டம்பர் மாதம், 03–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிர் மனுதாரர் ஆஜர் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**(விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–03.10 )

**1.** நான் ஏற்கனவே முதல் விசாரணையின் போது குறியீடு செய்ய தவறிய

ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து அனுமதி பெற்று இன்று தாக்கல் செய்கிறேன். கடந்த 19.09.2020 ம் தேதி நான் கொடுத்த புகாரின் பேரில் மேட்டூர் காவல் நிலையத்தில் பதிவுசெய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட புகார் வாக்குமூலம் ஆகியவற்றின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். **அது ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. மேலும் எனது கணவர் ரங்கசாமி இந்த வழக்கை வேறு நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டி மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டது என்றால் சரிதான். நானும், எனது கணவரும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எங்களது ஜாதி வழக்கப்படி திருமண செலவுகளை மணமகன் வீட்டார்தான் செய்வார்கள் என்றால் சரியல்ல. இருதரப்பினரும் ஆளுக்கு பாதியாக செலவுசெய்வார்கள். சீர்வரிசை இருதரப்பினரும் அவர்களாக தீர்மானித்து செய்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். ஆகவே திருமணத்தின்போது வரதட்சனை கேட்டதாக நான் பிரமாணபத்திரத்தில் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. திருமணத்தின் போது வரதட்சனை கேட்கவில்லை. அதன் பிறகு கேட்டார்கள்.

2. திருமணத்திற்கு பிறகு வரதட்சனை கேட்டது சம்மந்தமாக நான் காவல் துறையில் புகார் எதுவும் அளிக்கவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு 1 வருடத்திற்கு முன்பாகவே சார்பு நீதிமன்றத்தில் எனது கணவர் விவாகரத்து மனு தாக்கல் செய்துவிட்டார் என்றால் சரிதான். **(இருதரப்பினரும் சமாதானம் செய்துக்கொண்டு சேர்ந்து வாழ்வதற்கு வாய்ப்பு இருப்பதாக இந்நீதிமன்றம் கருதுவதாலும், அதற்காக தனது கணவருடன் சமரசம் பேசவேண்டும் என்று மனுதாரர் விருப்பம் தெரிவித்ததாலும், சமரச நடவடிக்கைக்காக வரும் 13.09.2025 ம் தேதி நடைபெறும் மக்கள் நீதிமன்றத்திற்கு வழக்கு கோப்பை**

**அனுப்ப வேண்டி குறுக்கு விசாரணை இத்துடன் நிறுத்திவைக்கப்படுகிறது.)**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–(03.25 PM)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/– நா. கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**